முருகப்பெருமான் துணை

**மகான் குமரகுருபரர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.01.2024**, சனிக்கிழமை

**1.** மாதவ வள்ளலே அரங்கா
மகான்கள் சபை படைக்க
பூதலத்தில் ஞானியாக வந்த
பிரணவக்குடில் வாழும் தேசிகா

**2.** தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
ஆசிதனை சோபகிருது கலை திங்கள்
ஆறாம்திகதி காரிவாரம் தன்னில்
(சோபகிருது வருடம் தை மாதம் 06 ம் நாள், 20.01.2024, சனிக்கிழமை)

**3.** தன்னிலே குமரகுருபரர் யானும்
தவராஜன் கேட்க உரைப்பேன்
அன்னதான தயவுமிக்க சேவை
அகிலம் எங்கும் சக்தியாகப் பரவ

**4.** பரவவே சக மனிதர்களின்
பசிபிணி விரட்டும் சூட்சுமம்
அறமாக வரமாக விளங்கி
அரங்கன் அவதாரம் நோக்கம்

**5.** நோக்கம் வழி உலகோர் வந்து
நிலமதனில் மாற்றம் தனை
தேக்கமின்றி ஞான வழிதனில்
தேசமெங்கும் நடத்த நேரும்

**6.** நேருமையான சமூகம் படைக்க
நிர்வாகம் செயல் முறைகளென
தருமப்படி தனிமனித நடவடிக்கை என
தக்கபடி அனைத்திலும் உண்மை

7. உண்மைநிலை நிறைந்திருக்க
உயர்வான ஜீவகாருண்ய மும்
நன்மையோடு நிறைந்திருக்க
நாடெங்கும் நல்லவிதமான மாற்றம்

8. மாற்றம் உண்மை சேவையாக
மக்களை பாதுகாத்து நன்கு
தேற்றும் போற்றும் வண்ணம்
தெரிவிப்பேன் வளரக் கூடும்

9. கூடாத சுயநலக் கொள்கை
குவலயம் விட்டு அகற்றவே
சுடரேற்றி அரங்க ஞானியும்
சுத்தநெறி வழிமுறை காட்டிவர

10. வருகவே உலகோர் பின்பற்றி
வணங்கி வழிமொழிந்துவர
பெருமை மிக்க ஞான உலகாக
பொதுநலம் சமூகநலம் காணும்

11. காணும் மகா சக்தியாக தலைமை
கலியினில் உருவாகி மாற்றம்
ஞான உலகாக ஞான யுகமாக
நல்மாற்றம் உலகம் அடையும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–